# “மட்டக்களப்பு வடக்குப்பிரதேசத்தில் அமைந்துள்ள விஷ்ணு ஆலயங்களின் வரலாற்றுப்பார்வை.

Joseph Ramesh

Temporary Assistant lecturer, Dep.Of History, Eastern University, Sri Lanka

**ஆய்வு சுருக்கம்**

ஈழநாட்டிலே திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் வைணவம் தனிச்சமயப் பிரிவாக இடம் பெறாதபோதிலும் திருமால் கோயில்கள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன. .சிங்கள பௌத்த மக்கள் புத்தபிரான் திருமாலை இலங்கைக்கு ஒரு காவற்தெய்வமாக வைத்துள்ளனர் என்று நம்புகின்றனர். சிங்கள மக்கள் பெரும்பாண்மையாக வாழும் பகுதிகளில் மகாவிஷ்ணு தேவாலயங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் வைணவ வழிபாடு காணப்படுகின்றது .மட்டக்களப்பில் விஷ்ணு வழிபாடு காணப்பட்ட போதிலும் இங்கு விஷ்ணு ஆலயங்கள் குறைவாகவே உள்ளன. மட்டக்களப்பு தமிழருடைய தொன்மையான வழிபாட்டுமரபில் விஷ்ணு வழிபாடு இடம்பெற்றுள்ளது.ஆனால் ஏனைய இந்துசமய வழிபாட்டு முறைகளோடு ஒப்பிடும்போது விஷ்ணு வழிபாடு குறைவாகவே உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் விஷ்ணு ஆலயங்களின் எ்ண்ணிக்கை ஏனைய ஆலயங்களோடு ஒப்பிடும்பொது குறைவாகவே உள்ளது. அவ்ஆலயங்கள் வரலாற்று அம்சங்களை கொண்டவை. விஷ்ணு ஆலயநடைமுறைகளும் அவற்றின் வரலாறும் அதனைச் சுற்றியுள்ள ஊர் மக்களின் வரலாறு பண்பாட்டு, கலை, கலாசார, வாழ்வியல் அம்சங்களோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**: விஷ்ணு ஆலயங்கள், கடவுள், வழிபாடு